
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1298**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்









**ஐயன் கார்த்திகேயன்**

'தங்கமோதிரம் திட்டத்துக்கு' Making charge, BIS hallmark fee, Transport charge என்று எந்தக் கட்டணமும் வேண்டாம், வெறும் 1 பைசா கூட கொடுத்தா போதும் என்று சொல்லும் ஜோய் ஆலுக்காஸ் நிறுவனம். இப்படி கைக்காசு போட்டு சமூக சேவை செய்ய டெண்டர் கேட்ட நிறுவனத்தின் 350 கோடி சொத்துகளை 2023-இல் அமலாக்கத் துறை முடக்கி இருக்கு.



**அருள் எழிலன்**

'தாய்மாமன் தங்கமோதிரம்' மோசடி கேள்வி கேட்டால் ஆபாச வசவு! தாய்மாமன் தங்கமோதிரம் திட்டம் விஜய் பிராண்ட் அம்பாஸிடராக இருந்த ஜோய் அலுக்காஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறது.



**இரா.எட்வின்**

ஏற்கெனவே, ஜோய் ஆலுக்காஸ் முறைகேடானதுதான். செய்கூலி, சேதாரத்திற்கு ஒரு பைசா டெண்டர் என்பதற்குப் பின்னால் மிகப்பெரிய அயோக்கியத் தனம் இருக்கிறது.
இது தீய ஆட்சி.



**ஆர்.எம்.யாசிர்**

ஜோஸ் ஆலுக்காஸ் CEO விஜய்யை சந்தித்த பின்பு, தாய்மாமன் தங்கமோதிரம் திட்டம் அறிவிக்கப்பட்டது. இப்போ வெறும் 1 பைசா மட்டுமே அசலில் இருந்து கேட்டு, அந்தக் குடும்ப நிறுவனத்திற்கே டெண்டர் செல்கிறது என்கிறது செய்தி. இதே போல தான் MLA-க்களுக்கு கார் என்று டெண்டரே விடாமல் மஹிந்திரா நிறுவனத்தின் கார்கள் மட்டுமே நேற்று சட்டமன்றத்திற்கு வந்தன. முதல்வர் அறைக்கும் 5.54 கோடிக்கு டெண்டர் நிறைவடைவதற்கு முன்பே பணிகள் நடந்துள்ளன என்றது டைம்ஸ் ஆஃப் இந்தியா ஊடகம்.



**ஆதவன் தீட்சண்யா**

ஒத்த பைசா போதும்
ஒரு ஆர்டர் மட்டும் தாயேன்
நீ ஒத்துக்கிட்டுப் போனா,
நாம கோல்டு பக்கம் போவோம்.




## பாதிக்கப்பட்ட இனமே... விழித்துக்கொள்!

'த.வெ.க. அரசின் 100 நாள் ஆட்சி எப்படியிருக்கிறது? என்னதான் நடக்கிறது தமிழ்நாட்டில்?' எனக் கேள்வி எழுப்பி, பதிலையும் கூறியுள்ளார், சமூகச் செயல்பாட்டாளர் வசுமதி. அவரது பதிவிலிருந்து...

"தனது நிர்வாகத் திறனின்மையை மறைக்க, 'ஊழல் ஒழிப்பு' எனும் போலி முகமூடியை அணிந்து, முன்னேற்றப் பாதையிலிருந்து முற்றிலும் விலகி, பொய்ப் பரப்புரைகளால் மக்கள் கவனத்தைத் திசைதிருப்பி, முக்கியமாக, சமூக விடுதலையைச் சிதைக்கும் ஆர்.எஸ்.எஸ்-இன் பின்னணித் திட்டத்தை அமோகமாக நடத்திக் கொண்டிருக்கிறது, இந்த ஆட்சி!

இது எப்படியிருந்த மாநிலம்? எப்படியிருந்தது இந்தச் சமூகம்? இந்த மண்ணின் சமூக விடுதலையைப் பின்னுக்குத் தள்ளும் பிரம்மாண்டமான சூழ்ச்சியை, இப்போது மீண்டும் கையில் எடுத்திருக்கிறது, ஆர்.எஸ்.எஸ். இம்முறை பா.ஜ.க.வைத் தவிர்த்துவிட்டு, தன் பதிலி(proxy)யான த.வெ.க. மூலம்.

கடந்த 50 ஆண்டுகளாகத் திராவிட இயக்கம் கட்டிக்காத்த சுயமரியாதை, தாய்மொழிப் பற்று, சமூக நீதி, மாநில சுயாட்சி ஆகிய அஸ்திவாரங்களை இன்றைக்கு 'மீம்ஸ்' மெட்டீரியலாக மாற்றி, ஏளனம் செய்யும் நிலைக்கு, நம் இளைஞர்களைத் தள்ளியிருக்கிறார்கள்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவனுக்குக் கிடைத்த சலுகையை, அதே சமூகத்தைச் சேர்ந்த ஒரு மந்திரியின் தலைமையில், அதே சமூகத்தைச் சேர்ந்தவர்களையே அவதூறு பேச வைக்கிறார்கள்!

நம் இளைஞர்கள், இன்று உலகம் முழுவதும் கொடிகட்டிப் பறக்கிறார்கள். ஆனால், "இங்கே பிளம்பருக்கும் எலெக்ட்ரீஷியனுக்கும் தான் அதிகத் தேவை" என்று இளைஞர்களின் எதிர்காலத்தைக் குறுகிய வட்டத்திற்குள் மடைமாற்றம் செய்யும் ஓர் அரசை, அதே இளைஞர்கள் தேர்வுசெய்யும் அவல நிலை, இங்கு உருவெடுத்துள்ளது!

2 மணி நேர சினிமாவில் பேசும் 'பஞ்ச் வசனங்கள்' வேறு! நிஜ வாழ்க்கை வேறு!

ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஆனால், ஊழலை ஒழிக்கிறோம் என்ற போர்வையில், உங்கள் சுயமரியாதையையும் 2,000 ஆண்டுகள் போராடிப் பெற்ற உரிமைகளையும் பறிக்கத் துடிக்கும் ஆதிக்க சக்திகளின் சூழ்ச்சியை உணராவிட்டால், மீண்டும் பழைய அடிமைத்தனத்திற்குத் தான் செல்ல நேரிடும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



சி.பன்னீர்செல்வன்



### ஊட்டி நிகழ்ச்சிக்கு, துணை முதலமைச்சராக...

2009-ஆம் ஆண்டு, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய நம் கழகத் தலைவர் அவர்கள், துணை முதலமைச்சராக ஊட்டி மலர் கண்காட்சியைத் திறந்துவைக்கும் அரசு விழாவுக்கு வருகைதந்தார். அப்போது, மேட்டுப்பாளையத்தில் ஓய்வெடுத்த தலைவர் அவர்களைக் குடும்பத்துடன் சென்று சந்தித்தேன். மனைவி சிந்தாமணி, மகள் சூர்யா, மகன் செந்தமிழன் ஆகியோருடன் சென்று தலைவரை வரவேற்று மகிழ்ந்தது, மறக்க முடியாத நினைவு.

– சி.பன்னீர்செல்வன்,
கண்ணார்பாளையம், காரமடை ஒன்றியம்,
மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுத் துணைத் தலைவர்,
கோவை வடக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## ம.லகுரு

### நான்கு குணங்கள்!

1963-இல் பேரறிஞர் அண்ணா எழுதிய கடிதத்தில், கழகத் தோழர்களிடம் இருக்கவேண்டிய குணங்கள் பற்றிக் குறிப்பிட்டார். "கழகத் தோழர்களுக்கு நான்கு முக்கிய குணங்கள் இருக்க வேண்டும். ஒன்று - எதையும் சகித்துக்கொள்ளும் பொறுமை குணம்; மற்றது எதற்கும் கோபம் கொள்ளாமல் இருப்பது; இன்னொன்று - எதற்காகவும் சலித்துக்கொள்ளாமலிருப்பது; நான்காவது - எதற்கும் வேதனைப்பட்டுக் கொள்ளாமலிருப்பது."

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900